දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.

අමාත්‍යතුමා / அமைச்சர் / Minister } 2784832, 2784807, 2785617

ලේකම් / செயலாளர் / Secretary } 2784812

කාර්යාලය / அலுவலகம் / Office } 2785141-50, Fax: 2784846

ඊමේල්/ஈ–மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்விஅமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය' ,ශ්‍රී ජයවර්ධනපුරකෝට්ටේ බත්තරමුල්ල
'இசுருபாய' ஸ்ரீ ஜயவர்தனபுரகோட பத்தரமுல்ல
"Isurupaya", SriJayawardhanapura Kotte Battaramulla.

මගේ අංකය / எமது இல. / My No. } ED/1/9/1/1/4

ඔබේ අංකය / உமது இல. / Your No. } ..............................

දිනය / திகதி / Dat } 2013.03. 27

**சுற்றுநிருப இல: 13 / 2013**

சுகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
கோட்டக் கல்விப் பிரதி மற்றும் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்

**மஹிந்த சிந்தனை நோக்கிற்கமைய எதிர்கால இலங்கையை அறிவின் கேந்திரமாக்கும் அபிவிருத்தி நோக்கை அடைவதற்கு ஐயாயிரம் ஆரம்ப பாடசாலைகளை மீளக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டம்- இரண்டாம் கட்டம் (2013.04.05 – 2013.06.05)**

வாழ்க்கையின் சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்ளக்கூடியவாறு பிள்ளைகளின் ஆளுமை விருத்திக்காக வலுவான அத்திவாரமிடுதல் ஆரம்பக் கல்வியின் பிரதான இலக்காகும். அவ் இலக்கை அடைவதற்காக 1000 இடைநிலைப்பாடசாலைகளுக்குச் சமமாக அபிவிருத்தி செய்யப்படும் ஆரம்ப பாடசாலைகள் தொகுதியைச் **"சிறுவர் நேயப் பாடசாலைகளாக"** அபிவிருத்தி செய்வதற்கு 6 பரிமாணங்களை உளடக்கியதான தொகுதி இனங்காணப்பட்டுள்ளது. சிறுவர் நேயப் பாடசாலை வேலைத்திட்டத்தின் பிரதான அடிப்படையாக மாணவர்களுக்கு மகிழ்ச்சிகரமான சுகாதாரமான பாதுகாப்பான பாடசாலைச் சூழலை உருவாக்குதல் அவசியமாகும். இதற்கான ஒரு ஏற்பாடாகத் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் பௌதிக வள வசதிகளை அதிகரிப்பதற்கு ஒரு பாடசாலைக்கு ரூபா 500,000 என்ற அடிப்படையில் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

02. இதன் முதற் கட்டமாக 2012ம் வருடத்தில் 1680 ஆரம்ப பாடசாலைகளில் அடிப்படைப் பௌதிக வள வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதன் இரண்டாம் கட்டமாக 2013ம் வருடத்தில் மேலும் 3,320 ஆரம்ப பாடசாலைகளில் உட்கட்டமைப்பு வசதிகளை அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. இவ் வேலைத்திட்டம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் பிரதான அனுசரணையுடன் 2013.04.05ம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. மாகாணக் கல்வி அமைச்சு, மாகாணக் கல்வித் திணைக்களம், மற்றும் வலயக் கல்விக் காரியாலயங்களின் பூரண ஒத்துழைப்புடன் மாவட்டச் செயலாளர்களின் வழிகாட்டுதலின் கீழ் இவ் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

03.இவ் வேலைத்திட்டத்தை விரைவாக நடைமுறைப்படுத்தும் நோக்கில் 2013.04.05 – 2013.06.05ம் திகதி வரையிலான இருமாத காலத்தை ஆரம்ப பாடசாலைகளின் அபிவிருத்திக்காகப் பயன்படுத்துவதற்குக் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது. இக் காலத்தினுள் இப் பாடசாலைகளில் உட்கட்டமைப்பு வசதிகளின் அடிப்படை அபிவிருத்தி நடவடிக்கைகள் அனைத்தையும் நிறைவு செய்வதற்கு எதர்பார்க்கப்படுகிறது, அதிபரின் முழுமையான அர்ப்பணிப்பு, மற்றும் சகல வளவாளர்களினதும் முழுமையான சமூகமளிப்புடன் இந்நோக்கத்தை நிறைவேற்றுவதற்குச் செயற்படுதல் வேண்டும்.

04.இவ்வேலைத் திட்டதத்தின் கீழ் ஆரம்ப பாடசாலைகளில் அபிவிருத்தி செய்யப்படவேண்டிய 10 அடிப்படைச் செயற்பாடுகள் கீழே தரப்பட்டுள்ளன.

1.மின்சார வசதிகள் வழங்குதல்
2.குடி நீர் வசதிகள் செய்தல்
3.மலசலகூடம் மற்றும் சுகாதார வசதிகளின் அபிவிருத்தி
4.பாடசாலை வேலி மற்றும் நுழைவாயில் அமைத்தல்.
5.பாவனையில் உள்ள கட்டடத்தைப் புதுப்பித்தல் , வர்ணம் பூசுதல்.
6.பாடசாலை பெயர்ப் பலகையை அமைத்தல்.
7.ஆரம்பப்பிரிவின் மாணவர்களுக்காகச் செயற்பாட்டு அறையொன்றை முறையாக அமைத்தல்.
8.விளையாட்டு முற்றத்தை முறையாக அமைத்தல்.
9.பாடசாலை வளவை மாதிரி வீட்டுத்தோட்டமாக அமைத்தல்
10.ஆசிரியர்கள் தற்போது தங்கியிருக்கும் ஆசிரிய விடுதி இருப்பின் அதன் அத்தியாவசியமான திருத்தங்களை மாத்திரம் செய்தல்.

05. பாடசாலைகளில் மேலே குறிக்கப்பட்ட செயற்பாடுகள் நிறைவு செய்யப்பட்டிருப்பின் இவற்றுக்கு மேலதிகமாக அவசியமாகக் கருதப்படுகின்ற, பாடசாலை இனம் கண்டுள்ள வேறு செயற்பாடுகளைச் செயற்படுத்த முடியும்.

06. 2013 ம் வருடத்தில் 1 ஆம் தவணையின் இறுதித் தினமான 2013.04.05 ஆம் திகதி அதிபர் ஆசியர் குழாத்துடன் பெற்றோர்கள் , நலன் விரும்பிகள்.சமூக அமைப்புகள் உள்ளிட்ட பாடசாலைச் சமூகத்தினரைப் பாடசாலைக்கு அழைத்து இவ் அபிவிருத்தி நிகழ்வு தொடர்பாக அறிவூட்டல் வேண்டும். .வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் திட்டமிடல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளதுடன் அதனைப் பாடசாலைக்குப் பொருத்தமானதாகத் தயாரித்து இக்காலத்திற்குள் இக்காரியங்களை நிறைவேற்றுவதற்குத் தங்களின் மிகுந்த கவனத்தை ஈர்க்கின்றேன்.

07. இவ்வேலைத்திட்டம் வெற்றிகரமாக நடைபெறுவதற்காகக் கோட்டக் கல்வபி பணிப்பாளரின் வகை கூறலின் கீழ் ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர்கள் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். இதற்காக அவர்களுக்குப் பாடசாலைகள் பெயர் குறித்துத் தரும் போது பொறுப்புக்களையும் கையளிக்க வேண்டும். புாடசாலைகளில் இச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவற்காக இவர்கள் அதி உச்ச ஒத்துழைப்பை வழங்குதல் கட்டாயமானதாகும்.

08. உரிய பிரதேசத்தின் பிரதேசச் செயலாளரால் பாடசாலை அபிவிருத்தி வேலைகளுக்காக ஈடுபடுத்தப்படும் வெவ்வேறு பங்குபற்றுனர்கள் மற்றும் நிறுவனத்தலைவர்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான ஏற்பாடுகள் அதிபரால் செய்து தரப்படும். இலங்கையின் பாடசாலை மாணவர்களுக்கான முழுமையான ஆரம்பக் கல்வியை உறுதிப்படுத்துவதுடன் அடிப்படை ஏற்பாடாகத் தேசிய நியமங்களுக்கேற்ப வசதிகளால் முழுமை பெற்ற ஆரம்ப பாடசாலைகள் தொகுதியை மீளக்கட்டியெழுப்பதல் இங்கு பிரதான நோக்கமாகும். இதன்படி நடைமுறைப்படுத்தப்படும் இவ்வேலைத்திட்டம் வெற்றிகரமாக அமைவதற்குத் தமது பாடசாலையின் ஆசிரியர் குழாம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் உள்ளிட்ட பாடசாலைச் சமூகத்துடன் உயர் ஒத்துழைப்பை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பது அதிபரின் வகை கூறலாகும்.

09. வழங்கப்பட்டுள்ள கால அட்டவணைக்கு அமைவாகச் சகல வாரங்களிலும் வாரத்திற்கு ஒரு முறை கோட்டக்கல்விப்பணிப்பாளரால் தமது கோட்டத்தில் அபிவிருத்தி செய்யப்படும் பாடசாலைகள் தொடர்பான முன்னேற்ற அறிக்கையை உரிய வலயக் கல்விப்பணிப்பாளருக்குப் பெற்றுத் தருதல் வேண்டும். இதன் பிரதியொன்றை மாகாண ஆரம்பக்கல்விப் பிரதி /உதவிக் கல்விப் பணிப்பாளருக்கும் மற்றும் கல்வி அமைச்சின் ஆரம்பக் கல்விக் கிளையின் கல்விப்பணிப்பாளருக்கும் அனுப்பிவைப்பது கட்டாயமானது.

10. மேலும் தேவையான வழிகாட்டுதல்களுக்காகப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மேலதிகச் செயலாளர் சந்திரா விக்கிரமசிங்க அவர்கள் (தொ.பே.இல-0714443038) மற்றும் கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர் எஸ்.யு.விஜேரத்ன(தொ.பே.இல-0779633322) அவர்களுடன் தொடர்பு கொள்ள முடியும். அத்துடன் கல்வி அமைச்சின் செயற்பாட்டறை. 1988இலக்கத்துடன் தொடர்பு கொண்டு விபரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இத் தேசிய வேலைத்திட்டம் வெற்றிகரமாக அமைவதற்குத் தாங்கள் வழங்கும் ஒத்துழைப்பை மேலாக மதிக்கிறேன்.

எஸ்.எம்.கோட்டாபய ஜயரத்ன
கல்விச் செயலாளர்.

பிரதிகள்:
1.செயலாளர்- பொருளாதார அபிவிருத்தி அமைச்சு-அ.கொ.பொ
2.சந்த்ரா விக்கிரமசிங்க –மேலதிகச் செயலாளர் (பொருளாதார அபிவிருத்தி அமைச்சு) அ.கொ.பொ
3.எஸ்.யு.விஜேரத்ன மேலதிகச் செயலாளர் (கல்வி அமைச்சு) அ.கொ.பொ
4.சகல மாவட்டச் செயலாளர்களுக்கும் - அ.கொ.பொ

இணைப்பு

**<u>2013.04.05 - 2013.06.05 வரையிலான இருமாத காலங்கள் ஆரம்ப பாடசாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை நிறைவு செய்வதற்காக நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய உத்தேச நிகழ்ச்சித் திட்டம்</u>**

| திகதி | செயற்பாடு | சமூகமளிப்பு | வகை கூறல் | அறிக்கை சமர்ப்பிக்க வேண்டிய அதிகாரி |
|---|---|---|---|---|
| 2013.04.05 | • ஆரம்ப பாடசாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை நிறைவு செய்வதற்கான வேலைத்திட்டம் , இரு அபிவிருத்தி மாதங்கள் தொடர்பாகப் பாடசாலைச் சமூகத்திற்கு அறிவூட்டும் நிகழ்வு மற்றும் வேலைத்திட்ட ஆரம்பம் | பிரதேச அரசியற் பிரமுகர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் உள்ளிட்ட பாடசாலைச் சமூகத்தினர் | அதிபர் | வலயக் கல்விப் பணிப்பாளருக்கு |
| 2013.04.05-2013.04.14 | • சமூகமளித்தல் அணுகுமுறையைப் பின்பற்றிப் பாடசாலையில் தற்போதுள்ள நிலைமையை உறுதிப்படுத்திக்கொள்ளல், அபிவிருத்தி செய்யப்படவேண்டிய உட்கட்டமைப்பு வசதிகளை இனங்காணல் மற்றும் முன்னுரிமைப்பட்டியல் தயாரித்தல் (செயற்திட்டம் ஆரம்பிப்பதற்குமுன்னர் உள்ள நிலைமையை நிழற்படமெடுத்து வைத்தல் அவசியம்) | மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் உள்ளிட்ட பாடசாலைச் சமூகத்தினர் மற்றும் ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் | அதிபர் | கோட்டக் கல்விப் பணிப்பாளருக்கு |
| | • ஒவ்வொரு அபிவிருத்தி வேலைத் திட்டத்திற்காகவும் பொறுப்புக்களைக் கையளிப்பதற்காகப் பாடசாலைச் சமூகக் குழுவினரைத் தெரிவு செய்தல் | மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் உள்ளிட்ட பாடசாலைச் சமூகத்தினர் மற்றும் கல்விக் கல்லூரி விரிவுரையாளர்கள், ஆசிரிய மாணவர்கள்,கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் | அதிபர் | பிரதேசச் செயலாளர் மறறும் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு |
| 2013.04.15-2013.04.28 | • இனங்காணப்பட்ட ஒவ்வொரு செயற்பாடுகளுக்காகவும் வெவ்வேறாக விசேடப்படுத்திய விபரங்கள் மற்றும் செலவுத்திட்டத்தைத் தயாரித்தல் | மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் உள்ளிட்ட பாடசாலைச் சமூகத்தினர் மற்றும் கல்விக் கல்லூரி விரிவுரையாளர்கள், ஆசிரிய மாணவர்கள், ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர், பொறியியலாளர், தொழினுட்ப அதிகாரிகள் | அதிபர்,பாடசாலை அபிவிருத்திச் சங்கம் பொறியியலாளர்கள் மற்றும் தொழினுட்ப அதிகாரிகள் | பிரதேசச் செயலாளர் மறறும் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | • பாடசாலையில் நடைமுறைப்படுத்துவதற்கு இனங்காணப்பட்ட ஒவ்வொரு செயற்பாடுகளுக்கும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மற்றும் பிரதேசச் செயலாளருக்குமிடையில் உடன்படிக்கை செய்துகொள்ளல், மற்றும் அனுமதி பெற்றுக்கொள்ளல் | பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,பாடசாலைச் சமூகக் குழு, கல்விக் கல்லூரி விரிவுரையாளர்கள், ஆசிரிய மாணவர்கள், கோட்டக் கல்விப் பணிப்பாளர், ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் | அதிபர்,பாடசாலை அபிவிருத்திச் சங்கம் | பிரதேசச் செயலாளர் மறறும் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு |
| | • உடன்படிக்கையின்படி வேலைத்திட்டங்களை ஆரம்பித்தல் | பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,பாடசாலைச் சமூகக் குழு, கல்விக் கல்லூரி விரிவுரையாளர்கள் ஆசிரிய மாணவர்கள், ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் | அதிபர்,பாடசாலை அபிவிருத்திச் சங்கம், கோட்டக் கல்விப் பணிப்பாளர் | பிரதேசச் செயலாளர் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு |
| | • பாடசாலையில் செயற்படுத்தப்படுகின்ற சகல செயற்பாடுகளும் உள்ளடங்கியதாக ஆவணத்தைத் தயாரித்தல் ,பாடசாலை அபிவிருத்தி வேலைகள் நடைபெறும் காலத்தினுள் அரச நிதியைச் செலவழித்தல், சமூக ஒத்துழைப்பு மற்றும் வேறு நிதி, நன்கொடைகள் தொடர்பாக அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும். விசேடமாக சிரமதானத்தின் மூலம் ஒத்துழைப்புக் கிடைப்பின் இது தொடர்பான வரவுப் பதிவுகள் மற்றும் விஷேட ஒத்துழைப்பக்கள் இருப்பின்(உணவு,தேநீர் வழங்குதல் போன்றவை)அவை பற்றிய குறிப்புக்களை வேறு வேறாகப் பதிந்து வைத்திருத்தல் | அதிபர் சமூகக் குழு,ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் | அதிபர்,பாடசாலை அபிவிருத்திச் சங்கம், கோட்டக் கல்விப் பணிப்பாளர் | பிரதேசச் செயலாளர் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு |
| | • நடைபெறும் செயற்பாடுகள் தொடர்பாக (திகதிகள் குறித்தவாறு) சகல அறிக்கைகளையும் பேணுதல். (உ-+ம் வருகை தருகின்றவர்களின் வரவுப்பதிவு)<br>• பாடசாலை மட்டத்தில் முன்னேற்ற அறிக்கையைப் பேணுதல் மற்றும் அவற்றை முன்வைத்தல். | அதிபர் பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,பாடசாலைச் சமூகக் குழு, கல்விக் கல்லூரி விரிவுரையாளர்கள் ஆசிரிய மாணவர்கள், கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் | அதிபர்,பாடசாலை அபிவிருத்திச் சங்கம், கோட்டக் கல்விப் பணிப்பாளர். | பிரதேசச் செயலாளர் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு |
| 2013.04.29-<br>2013.05.12 | • செயற்பாடுகள் தீர்மானிக்கப்பட்ட தரத்திற்கேற்ப நடைபெறுவதை உறுதிப்படுத்துவதற்கான கண்காணிப்பு | அதிபர் பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,பாடசாலைச் சமூகக் குழு, கல்விக் கல்லூரி விரிவுரையாளர்கள் ஆசிரிய மாணவர்கள், கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர்,வலய ஆரம்பக்கல்வி (பி.க.ப உ.க.ப) இணைப்பாளர்,சுகாதார மேம்பாட்டு அதிகாரி | அதிபர்,பாடசாலை அபிவிருத்திச் சங்கம், கோட்டக் கல்விப் பணிப்பாளர். | பிரதேசச் செயலாளர் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | • பாடசாலை மட்டத்தில் முன்னேற்றம் தொடர்பான கலந்துரையாடல் நடத்துதல் அறிக்கை தயாரித்தல் | அதிபர் பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,பாடசாலைச் சமூகக் குழு, கல்விக் கல்லூரி விரிவுரையாளர்கள் ஆசிரிய மாணவர்கள், கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர். | அதிபர்,பாடசாலை அபிவிருத்திச் சங்கம், கோட்டக் கல்விப் பணிப்பாளர். | பிரதேசச் செயலாளர் மறறும் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு |
| 2013.05.13-2013.05.26 | • நிறைவு செய்யப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக அறிக்கை தயாரித்தல் மற்றும்பிரதேச இணைப்புக் குழுவிற்கு முன்னேற்ற அறிக்கையை முன்வைத்தல் (உரிய நிழற் பிரதியுடன்) | அதிபர் பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,பாடசாலைச் சமூகக் குழு, கல்விக் கல்லூரி விரிவுரையாளர்கள் ஆசிரிய மாணவர்கள், கோட்டக் கல்விப் பணிப்பாளர், ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர். | அதிபர், கோட்டக் கல்விப் பணிப்பாளர். வலய ஆரம்பக் கல்வி இணைப்பாளர்,சுகாதார மேம்பாட்டு அதிகாரி | பிரதேசச் செயலாளர் மறறும் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு |
| 2013.05.27-2013.06.05 | • செயற்பாடுகள் நிறைவடைந்த பின் அவற்றை முறையாகப் பராமரிப்பது தொடர்பாகச் சமூகத்திற்கு அறிவூட்டல் | அதிபர் பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,பாடசாலைச் சமூகக் குழு, கல்விக் கல்லூரி விரிவுரையாளர்கள் ஆசிரிய மாணவர்கள், கோட்டக் கல்விப் பணிப்பாளர் ,ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் | அதிபர், கோட்டக் கல்விப் பணிப்பாளர். வலய ஆரம்பக் கல்வி இணைப்பாளர்,சுகாதார மேம்பாட்டு அதிகாரி | பிரதேசச் செயலாளர் மறறும் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு |
| | • சகல வேலைத்திட்டங்களும் நிறைவடைந்தபின்னர் இறுதி முன்னேற்ற அறிக்கை தயாரித்தல் மற்றும் இணைப்புக் குழுவிற்கு முன்னேற்ற அறிக்கையை முன்வைத்தல் | அதிபர் பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,பாடசாலைச் சமூகக் குழு, கல்விக் கல்லூரி விரிவுரையாளர்கள் ஆசிரிய மாணவர்கள், கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் | அதிபர், கோட்டக் கல்விப் பணிப்பாளர். வலய ஆரம்பக் கல்வி இணைப்பாளர்,சுகாதார மேம்பாட்டு அதிகாரி | பிரதேசச் செயலாளர் மறறும் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு |
| | • வேலைத்திட்டத்தை மதித்தல், பாராடுதல் நன்றிஉரைத்தலுக்கான விசேட நிறைவு வைபவம் | சமூகமளித்த அனைத்துப் பங்குபற்றுனர்களினதும் பங்களிப்பு | அதிபர், வலய ஆரம்பக் கல்வி இணைப்பாளர்கள் | பிரதேசச் செயலாளர் மறறும் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு |